International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# கலைஞர் ஆட்சியின் திட்டங்களில் முதன்மையான சமூக நல திட்டத்தின் தாக்கம் ஒரு வரலாற்று கண்ணோட்டம்

**ரா. பத்மநாபன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் ப. கலைச்செல்வன்**
உதவிப் பேராசிரியர் (On Deputation), வரலாற்றுத் துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மணல்மேடு – மயிலாடுதுறை

**ஆய்வுச் சுருக்கம்**

திரு. முத்துவேலார் திருமதி அஞ்சுகம் அம்மாள் இவர்களுக்கு முத்தமிழ் அறிஞர் என்று போற்றப்படும் கலைஞர் மு. கருணாநிதி திருக்குவளை எனும் சிற்றூரில் தற்போதைய நாகப்பட்டினம் மாவட்டத்தில் 3 ஜூன் 1924ஆம் ஆண்டு பிறந்தார் மிகச்சிறந்த சமூக சீர்திருத்தவாதியான மு. கருணாநிதி அனைத்து துறைகளிலும் தனக்கென ஒரு தனித்துவத்தை பெற்றார். சுமார் 13 முறை சட்டமன்ற உறுப்பினராகவும், ஒன்றாவது முறை 1969-1971, இரண்டாவது முறை 2071-1976, மூன்றாவது முறை 1989–1991, நான்காவது முறை 1996-2001 ஐந்தாவது முறை 2006 -2011 வரை என ஐந்து முறை தமிழக முதலமைச்சராகவும், தமிழ்நாட்டின் நீண்ட கால முதல்வர்களில் ஒருவராகவும் கருதப்படுகிறார். இக்காலகட்டங்களில் மக்களுக்கான பல சமூக நலத்திட்டங்களை தீட்டி இனம், மதம், மொழி, நிறம், மதம், பாலினம் இன்றி அனைவரின் முன்னேற்றத்திற்கும் சமூக நீதி மற்றும் சமூக நலன் காக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சமூக நல திட்டங்களை தீட்டி தமிழ்நாட்டில் உயர் நவீன சமுதாயமாக மாற வழிவகுத்தது சமூக நலத் திட்டமே என்று இக்கட்டுரை முடிவு செய்கிறது.

## கைரிக் ஷா ஒழிப்பு

கைரிக்ஷ இக்காலகட்டங்களில் அதிக அளவில் இருந்தன. மாடு போல மனிதனை மனிதனே இழுத்து செல்வது மரியாதைக்கு அழகு அல்ல என்பதால் அனைத்து சைக்கிள் கைரிக்ஷகளுக்கும் மோட்டார் பொருத்தி கொடுக்கப்படும். மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக் ஷா, ஆட்டோ ரிக் ஷா, டாக்ஸி ஆகியவற்றின் ஓட்டுனர்கள் சொந்தத்தில் புதிய வாகனங்களை வாங்க விரும்பினால் அரசு குறைந்த வட்டியில் கடன் கொடுத்து உதவ வழிவகை செய்யப்படும் என்ற நடவடிக்கையின் மூலம் 1973 ஜூன் 3 ஐம்பதாவது பிறந்தநாள் விழாவன்று கை ரிக் ஷாக்களை ஒழிக்க ஆணையிட்டார்.[1]

## இட ஒதுக்கீடு அளித்த இன பாதுகாவலர்

அரசியலமைப்பில் பிற்படுத்தப்பட்டோருக்கான அமைப்பை அமைத்தது கலைஞர். மேலும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்கான வாரியம் அமைத்தார். ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினர் கல்வி, வேலை வாய்ப்புகளை மிகுதியாக பெற்று வாழ்வதற்காக தமிழகத்தில் நிலவி வந்த இட ஒதுக்கீட்டு அளவை உயர்த்தினார். அரசியலமைப்பில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 31%, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30%, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18% பழங்குடியினருக்கு 1% என இட ஒதுக்கீட்டை 1989இல் கொண்டுவந்து தகுந்த இட ஒதுக்கீட்டை அளித்து தமிழ்மக்களின் இனப்பாதுகாவளர் என்பதை உறுதிப்படுத்தினார்.[2]

## உழைப்பாளிகள் மற்றும் அரசு ஊழியர் நலனை காத்த கலைஞர்

மே 1, சம்பளத்துடன் கூடிய பொதுவிடுமுறையாய் அறிவித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அரசு ஊழியர்களுக்கு குடும்பநலத் திட்டத்தை தந்தது மட்டும் அல்லாமல் அவர்கள் மீதான ரகசிய அறிக்கை முறையை ஒழித்தார்.[3]

### இஸ்லாமியர்களின் காவலர்

உருது பேசும் இஸ்லாமியர்களை பிற்படுத்தப் பட்டோர்பட்டியலில் தமிழ் இஸ்லாமியர்களை சேர்த்தார். மேலும் சிறுபான்மை இன இஸ்லாமியர்களுக்கு பொருளாதார வளர்ச்சி ஏற்பட அமைப்பு ஒன்றை ஏற்படுத்தினார். வாழ்ந்த மனிதரான நபிகள் நாயகத்தின் பிறந்த நாளை அரசு விடுமுறையாய் அறிவித்த தலைவர் முத்தமிழறிஞர் மு.கருணாநிதி இவ்வாறக இஸ்லாமியர்களின் காவலர் ஆனார்.[4]

### கலைஞர் ஒரு பெண்ணியலாளர்

தந்தை சொத்தில் பெண்களுக்கு சம உரிமையை சட்டமாக்கினார் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு களில் பெண்களுக்கு 30% இட ஒதுக்கீடு தந்தார். உள்ளாட்சி பதவிகளில் 33% பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கியவர். மேலும் மேயர் பதவிகளில் தாழ்த்தப்பட்ட இனத்திலிந்து ஒரு பெண் மேயர் வர செய்தார்.

டாக்டர் முத்துவெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவி திட்டம் மு.கருணாநிதி அவர்களால் 1989இல் வழங்கி அறிமுகம் செய்யப்பட்டது.[5]

கர்ப்பிணிப் பெண்களுக்கு சத்துணவு உண்பதற் காகப் பேறு காலத்தின் முன் இரண்டு மாதங்களுக்கும், பின் இரண்டு மாதங்களுக்கும் மாதம் ரூ. 50 வீதம் 14 மாதங்களுக்கு 200 ரூபாய் வழங்கப்பட்டது. இந்த திட்ட நிதியுதவி 1996-ல் மாதம் ரூ. 500 வீதம் 4 மாதங்களுக்கு ரூ. 2000 என மேலும் உயர்த்தி வழங்கினார். பேறு காலத்தில் இவ்வாறு வழங்கப்பட்ட நிதி மேலும் 15.09.2006 முதல் இரண்டு தவணையாக தலா 3,000 ரூபாய் என 6,000 ரூபாய் வழங்கி கர்ப்பிணிப் பெண்களின் அன்பையும் ஆதரவை யும் பெற்றார்.[6]

1989-ஆம் ஆண்டு தர்மபுரியில் மகளிர் சுய உதவி குழுக்கள் முதல்முறையாக தொடங்கி வைக்கப் பட்டன.[7] இத்திட்டத்தின் மூலம் பெண்கள் சுயதொழில் செய்து சொந்த உழைப்பில் தங்களை நிலை நிறுத்திக் கொள்ள வாய்ப்பாக அமைந்தன. இத்திட்டம் தமிழகம் முழுவதும் செயல் படுத்தப்பட்டன.

ஏழைப்பெண்கள் திருமணம் செய்துகொள்ள வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள பெண்களை முன்னேற்றும் வகையில் திருமண நிதியுதவி வழங்கும் மூவலூர் இராமாமிர்தம் திருமண உதவித்தொகை திட்டம் செயல்படுத்தினார். இவ்வாறு எண்ணற்ற பெண்கள் முன்னேற்றத் தால் பங்கு பெற்று பெண்ணியளாலர் ஆனார்.

### விதவைகள் முன்னேற்றத்தில் கலைஞர் பங்கு

கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதரவற்ற ஏழைப்பெண்களுக்காக சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், விதவைகளின் மறுமணத்தை ஊக்குவிக்கும் விதவை டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத்திட்டம் 1975இல் கொண்டுவந்து விதவைகள் மனதில் நீங்கா இடம் பெற்றார் கலைஞர்.[8]

### உழவர் சந்தை திட்டம்

விளைவித்த பொருள்களை விவசாயிகள் தாங்கள் சந்தையில் விற்று நேரடியாக பலன் பெறும் உழவர் சந்தைகள் திட்டத்தை தமிழகத்தின் பல பகுதிகளிலும் கலைஞர் மு. கருணாநிதி 14.09.1999-ல் மதுரையில் தொடங்கி வைத்து விவசாயிகளை ஊக்கப்படுத்தார்.[9]

### சாதி மதம் பாராமல் அர்ச்சகர் ஆகும் திட்டம்

23-மே 2006ஆம் ஆண்டு அனைத்து பிரிவினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டத்தின் அரசாணையை இந்நாளில் வெளியிட்டார். சாதிய வேறுபாடுகள் இல்லாத சமுதாயம் மூடநம்பிக்கை ஒழித்த சமுதாயம் காண வேண்டும் என்று ஆசைப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் 5ஆவது முறையாக முதல்வராக பதவி ஏற்றவுடன் இத்திட்டத்தை கொண்டு வந்தார். இதன் மூலம் சமூக நீதியை நிலைநாட்டிய சமத்துவ சகோதரத்துவம் தரைத்திட அனைத்து மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக விளங்கினார்.

### பெரியாரின் நினைவு சமத்துவபுரம் கண்ட சமூக நீதி காவலர்

சாதி, மதம் வாரியாக மக்கள் தமிழர்கள் என்ற உணர்வை மறந்து பிரிந்து இருப்பதை ஒழிப்பதற்காக தமிழகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் அனைத்து வித சமூக இன மொழி, சாதி மக்களை கொண்ட சமத்துவபுர குடியிருப்புகளை முத்தமிழறிஞர் மு.கருணாநிதி அவர்கள் 1997இல் தொடங்கி வைத்து சமூகநீதியை வளர்த்தார்.[10]

### அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம்

1989இல் கழக அரசில் கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு உதவித்தொகை ரூ.5000 என்பது 1996இல் ரூ.10,000 என உயர்த்தப்பட்டதோடு மண மக்களில் ஒருவர் ஆதிதிராவிடர் எனில் 2-10-1997 முதல் உதவித்தொகை ரூ. 20,000 என அதிகரிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1996க்குப் பின் 3,281 தம்பதியர்க்கு 4 கோடியே 72 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

### அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித்

1996-97இல் இத்திட்டத்திற்கு நிதியுதவி 2000 ரூபாய் என்றிருந்து 1997-98இல் ரூ.3000 என்றும் 1998-99இல் ரூ. 5000 என்றும் 1999-2000இல் ரூ. 7,000 என்றும் படிப்படியே இந்த ஆட்சியில் உயர்த்தப் பட்டுள்ளது. 1996க்கும் பின் 452 மகளிர்க்கு ரூ. 22.72 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

### ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப்படிப்பு திட்டம்

1989-90இல் கழக அரசு அமைந்த போது குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் 12 ஆயிரத்திற்கு

குறைவாக உள்ள மாணவிகளுக்கு பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி வழங்க ஆணையிடப்பட்டது.[11] மீண்டும் 1996இல் கழக அரசு அமைந்தவுடன் ஆண்டு வருமானம் 12 ஆயிரம் ரூபாய் என்பது 24 ஆயிரம் ரூபாய் என உயர்த்தப்பட்டுள்ளது.

**சிவகாமி அம்மையார் பெண் குழுந்தைகள் பாதுகாப்புத் திட்டம்**

ஆண் குழந்தை இன்றி இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் ஆண் குழந்தை இன்றி இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் உள்ள வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் 40 வயதுக்குட் பட்ட தாய் அறுவை சிகிச்சை செய்து கொண்டால் ஒவ்வொரு குழந்தையின் பெயரிலும் 1500 ரூபாய் தமிழ்நாடு அரசு நிதி நிறுவனத்தில் 5 வருட காலத்திற்கு வைப்புத்தொகையாக வைக்கப்பட்டு, ஒவ்வொரு ஐந்தாண்டிலும் புதுப்பிக்கப்பட்டு அப்பெண் குழந்தைகளுக்கு 20 வயது முடியும் போது வட்டியுடன் பெற்றுக் கொள்ளலாம் என 1997இல் ஆணை பிறப்பிக்கப் பட்டது.[12]

ஒரே பெண் குழந்தையுடன் அறுவை சிகிச்சை செய்து கொண்டால் பெற்றோர்களுக்கு 3000 ரூபாய் ஐந்து ஆண்டு காலத்திற்கு வைப்புத் தொகையாக வைக்கப்பட்டு ஒவ்வொரு ஐந்தாண்டுக்கும் புதுப்பிக்கப்பட்டு பெண் குழந்தைக்கு 20 வயது முடியும்போது வட்டியுடன் பெற்றுக் கொள்ளலாம்.

1996க்குப்பின் 1500 ரூபாய் வீதம் 1,15,895 பெண் குழந்தைகளுக்கும், 3000 ரூபாய் வீதம் 1,241 பெண் குழந்தைகளுக்கும் ஆக மொத்தம் 1,17,136 பெண் குழந்தைகளுக்கும் 19 கோடியே 20 இலட்சம் ரூபாய் வைப்பு நிதியாக உருவாக்கப்பட்டுள்ளது.[13]

**ஊனமுற்றவர்களை மணந்து கொள்ளும் ஊனமுற்றவர்களுக்கு ஊக்க நிதி**

காதுகேளாத, வாய்பேசாதவர்களை மணம் செய்து கொள்ளும் ஊனமுற்றவர்களுக்கும்; ஒரு கை அல்லது கால் இழந்தோரை திருமணம் செய்து கொள்ளும் ஊனமற்றவர்களுக்கும் வழங்கப்படும் நிதியுதவி ரூ.5,000 என்பது ரூ.7,000 என 2000-2001இல் அதிகரிக்கப் பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோருக்கான பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்து வந்த பயனாளிகளின் எண்ணிக்கை 6,400 என்பது 11.07.2000 முதல் 7,400 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டுத் தொகை 1 கோடியே 33 இலட்சத்து 20,000 ரூபாய் ஆகும்.

உடல் ஊனமுற்றோருக்கான சுய வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியத் தொகை 06.07.2000 முதல் ரூ.1000லிருந்து 2000 ஆக உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 800லிருந்து 1000ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென ரூ.20 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மகளிர் நடத்தும் நியாயவிலைக் கடைகள்**

1998இல் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம் முதலில் மதுரையிலும், பின்னர் பல பகுதிகளி லுமாக மொத்தம் 230 இடங்களில் முழுவதும் மகளிர் நடத்தும் நியாய விலைக் கடைகள் தொடங்கப்பட்டு வெற்றிகரமாக நடைபெறுகின்றன. மேலும் கூடுதலாக மகளிர் நடத்தும் நியாய விலைக் கடைகள் திறக்க அரசு முடிவு செய்துள்ளது.

**முடிவுரை**

ஒரு சாதாரண ஏழை குடும்பத்தில் பிறந்து தன்னுடைய இலக்கிய புலமையாலும், பேச்சாற்றலாலும், எல்லாவற்றிற்கும் மேலாக கடினமாக உழைத்தாலும் தமிழக வரலாற்று அரசியலில் முத்திரை பதித்தார் அவருடைய சமத்துவ சகோதரத்துவ சுயமரியாதை பகுத்தறிவு சமூக நீதி போன்ற கொள்கையால் மக்களின் உள்ளங்களை கொள்ளை கொண்டார், இவர் தமிழக மக்களுக்கு செய்த நலத்திட்டங்கள் எண்ணிலடங்கா இவற்றிள் வரலாற்று சிறப்புமிக்க சமூக நலத்திட்ட திட்டங்கள் செயல்படுத்தி சமூக மாற்றத்தை அல்லது தாக்கத்தை உருவாக்கினார் என்பதை இக்கட்டுரையின் மூலமாக உறுதிப் படுத்துகின்றன.

**துணைநூல் பட்டியல்**

1. தி.மு.க. தலைமை கழகம், **திமுக தேர்தல் அறிக்கை 1989 தலைமை கழகம்,** சென்னை, 1988.
2. பி.டி. பாண்டி செல்வம் **கலைஞர் சகாப்தம்.** நேசம் பதிப்பகம், சென்னை 18, 2023.
3. **மேலது**
4. **மேலது**
5. **தினமணி,** ஜனவரி, 6, 1969
6. புலவர் முத்து வாவாசி, **கலைஞர் செதுக்கிய தமிழகம்,** கிட்டு-காமாட்சி பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை – 14, 2021,
7. கலைஞர், **சாதனை சரித்திரம்,** தலைமை கழக வெளியீடு, சென்னை, ஜனவரி, 2001.
8. **மேலது.**
9. தமிழரசு வெளியீடு, நவம்பர் 14, 1919
10. ந. வெங்கடேசன், **கலைஞர் சட்டமன்ற உரைநயம்,** காந்தி பதிப்பகம், நாட்டு சாலை, பட்டுக்கோட்டை.
11. மு. கலைஞர், **சாதனைச் சரித்திரம்,** திராவிட முன்னேற்றக்கழகம், அண்ணா அறிவாலயம், சென்னை, ஜனவரி 2021.
12. **மேலது.**
13. **மேலது.**